**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : STC No. 264/2017 | Date | : 11.09.2025 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : சுப்பிரமணி | Calling | : |
| Father Name | : அங்கப்பன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.09.2025

(எதிரிகள் ஆஜர் இல்லை, எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

நான் பெருமாபாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது. நான் எந்த கையெழுத்தும் செய்யவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் எனது கையொப்பம் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை** :–

கடந்த 29.06.2015 ஆம் தேதியன்று மாலை சுமார் 04.30 மணியளவில் அன்பழகன், வரதராஜ், குண்டுமுத்து என்கின்ற முத்துசாமி ஆகியோர்களுக்கும் பிரகாஷ் தரப்பினருக்கும் குடோன் தொடர்பாக அடிதடி ஏற்பட்டதாகவும், அது

தொடர்பாக விசாரணை செய்வதற்காக போலீசார் 02.07.2015 ஆம் தேதியன்று காலை 07.00 மணியளவில் அங்கு வந்திருந்ததாகவும், அந்த சமயத்தில் நான் அந்த இடத்தில் இருந்ததாகவும், அங்கு வந்த போலீசார் என் முன்னிலையிலும் முத்துசாமி என்பவர் முன்னிலையிலும், மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்ததாகவும், பார்வை மகஜரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிகளுக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2025.09.11 17:34:56 +0530

Judicial Magistrate No.III,

Erode.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | STC No. 264/2017 | Date | : | 11.09.2025 |
| Deposition of Witness for | : | அ.சா.3 | Taluk | : | |
| Name | : | முத்துசாமி | Calling | : | |
| Father Name | : | செல்லமுத்து | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.09.2025

(எதிரிகள் ஆஜர் இல்லை, எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

நான் பெரியார் நகரில் குடியிருந்து கொண்டு சலூன் கடை வைத்துள்ளேன். எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது. நான் எந்த கையெழுத்தும் செய்யவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் எனது கையொப்பம் இல்லை. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் உள்ள சாட்சி கையொப்பங்களில் என்னுடைய கையொப்பம் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :–**

கடந்த 29.06.2015 ஆம் தேதியன்று மாலை சுமார் 04.30 மணியளவில் அன்பழகன், வரதராஜ், குண்டுமுத்து என்கின்ற முத்துசாமி ஆகியோர்களுக்கும் பிரகாஷ் தரப்பினருக்கும் குடோன் தொடர்பாக அடிதடி ஏற்பட்டதாகவும், அது

தொடர்பாக விசாரணை செய்வதற்காக போலீசார் 02.7.2015 ஆம் தேதி அன்று காலை 07.00 மணியளவில் அங்கு வந்திருந்ததாகவும், அந்த சமயத்தில் நான் அந்த இடத்தில் இருந்ததாகவும் அங்கு வந்த போலீசார் என் முன்னிலையிலும், சுப்பிரமணி என்பவர் முன்னிலையிலும், மாதிரி வரைபடமும் பார்வை மகஜரும் தயார் செய்ததாகவும், பார்வை மகஜரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிகளுக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2025.09.11 17:35:10 +0530

Judicial Magistrate No.III,

Erode.